Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி -13 | 30-10-2003 | வியாழக்கிழமை | ஓசை 254




# கொழும்பு தமிழ்-சிங்கள கலாச்சார நிகழ்வில் சிஹல உறுமய கும்பல் புகுந்து தாக்குதல்

## இரு ஊடகவியலாளர் உட்பட 6 பேர் காயம் நிகழ்வைக் குழப்பியடிக்க நடந்த முயற்சி

(கொழும்பு)

**கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்-சிங்கள கலாச்சார விழாவில் சிஹல உறுமய கட்சியினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறுபேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் இருவர் ஊடகவியலாளர்கள். இச்சம்பவம் தொடர்பாக ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

நேற்றுக்காலை இந்நிகழ்வு ஆரம்பமாகி நடந்து கொண்டிருக்கையில் விழா ஆரம்பமாகும் போது பார்வையாளர் போன்று உள்ளே வந்த சிஹல உறுமயவினர் விழா நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரென எழுந்து கூக்குரலிட்டு குழப்பத்தை விளைவித்தனர். இதனையடுத்து விழா ஏற்பாட்டாளர்களால் இவர்கள் மண்டபத்திற்கு வெளியே பலாத்காரமாக தள்ளப்பட்டனர். வெளியிலிருந்து கற்களால் வீசிய இவர்கள் சிறிது நேரத்தில் மீண்டும் திடீரென பலாத்காரமாக உள்ளே நுழைந்து விழாவைக் குழப்ப முற்பட்ட வேளை விழா ஏற்பாட்டாளருக்கும் இவர்களுக்கு மிடையில் கைகலப்பு ஏற்பட்டது. இதில் மூவர் கத்திக்குத்துக்கும் இலக்காகினர். அத்துடன் கல்வீச்சு காரணமாக சிலர் காயமடைந்துள்ளனர். கல்வீச்சு கத்திக்குத்துக்குள்ளானோர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து மண்டப பகுதிக்கும் விழா ஏற்பாட்டாளர்கள் மற்றும் விழாவில் பங்குபற்றும் அனைவருக்குமான பாதுகாப்பிற்கு மேலதிக பொலிசார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. பின்னர் நேற்றைய

(8ஆம் பக்கம் பார்க்க)





# இராணுவத்தினரின் உறவினர்களே தாக்குதல் நடத்தினராம்

## சிஹல உறுமய கூறுகிறது

புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற சிங்கள-தமிழ் கலாச்சார நிகழ்வில் தாக்குதல் நடத்தியவர்கள் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் பாதிக்கப்பட்ட இராணுவத்தினரின் உறவினர்களே எனச் சிஹல உறுமய கூறியுள்ளது.

இத்தாக்குதல் நத்தப்பட்டதற்குத் தாமே பொறுப்பு எனக் கூறியுள்ள

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தம்

சிறிலங்காவும் அமெரிக்காவும் கொழும்புத் துறைமுகப் பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் நேற்றுக் கைச்சாத்திட்டன. இதன் மூலம் அமெரிக்காவின் கப்பல்களுக்குக் கொழும்புத் துறைமுகத்தில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் அத்துடன் கொழும்புத் துறைமுகத்திற்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது. இவ் ஒப்பந்தப்படி அமெரிக்க வர்த்தக அபிவிருத்தி நிறுவனம் கொழும்புத் துறைமுகத்துக்குத் தேவையான கொள்கலன் பாதுகாப்புகளுக்கு நிதியுதவி வழங்கவிருக்கிறது.

(8ஆம் பக்கம் பார்க்க)

- திருமலை-முள்ளிப்பொத்தானை -

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு வாள் வெட்டு!

- (திருகோணமலை)

திருகோணமலை நகரிலிருந்து 18 கி.மீற்றர் தூரத்திலுள்ள முள்ளிப்பொத்தான்குளம் வாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் இனந்தெரியாதோரின் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளனர். இம்மூவரும் கந்தளாய் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து கந்தளாய் பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து முள்ளிப்பொத்தானையில் ஹர்த்தால்

(திருகோணமலை)

முள்ளிப்பொத்தானைப் பகுதியில் மூன்று முஸ்லிம்கள் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரின் வாள் வெட்டுக்கு இலக்கான சம்பவத்தைக் கண்டித்து நேற்று முள்ளிப்பொத்தானைக் கிராமத்தில் ஹர்த்தால் இடம்பெற்றது.

இதேவேளை இக்கிராமத்தை அண்டியுள்ள திருகோணமலை கண்டி வீதியிலும் மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மறியல் போராட்டத்தில் ஈடுபட்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வவு.குழு மோதலில் 7 பேர் காயம்

(செட்டிகுளம்)

வவுனியாவில் குழு மோதலால் பலர் காயமடைந்ததுடன் இதில் 7 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து புலிகளும், பொலிசாரும் இணைந்து பிரச்சினையினை கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

வவுனியா மறவன்குளம், கிடாச்சூரி பகுதியில் கடந்த சில நாட்களாக இருந்த முறுகல் திங்கள் இரவும், செவ்வாய் காலையும் மோதலாக வெடித்துள்ளது. இதன்போதே பலர்காயம் அடைந்துள்ளனர். இவர்களில் 7 பேர்

(8ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுத் தலைவர் நேற்று நோர்வே சென்றார்

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப்புத் தலைவர் ரெலவ்சன் நேற்று நண்பகல் கொழும்பிலிருந்து நோர்வே புறப்பட்டுச் சென்றார். பகல் 12 மணியளவில் எயர்லங்கா விமானம் மூலம் இவர் நோர்வே சென்றுள்ளார். முல்லைத்தீவு கடலில் காணப்பட்டதாகக் கூறப்படும் கப்பல் தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் குற்றச்சாட்டையடுத்து அவர் நோர்வே சென்றுள்ளார்.

இதேவேளை கப்பல் குறித்து விடுதலைப்புலிகளுக்குத் தகவல்களைக் கசியவிட்டுள்ளார்கள் என்ற சனாதிபதி சந்திரிகாவின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நோர்வே அதிகாரிகள் பக்கச் சார்பற்ற விசாரணையை நடத்தவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (32)

# அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் யாழ்.இல் புலிகளுடன் சந்திப்பு

குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்துள்ள அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் அலன் சிறிவின் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

கொக்குவில்,பொற்பதி வீதியிலுள்ள யாழ்.மாவட்ட அரசியல் துறைத் தலைமைச் செயலகத்திற்கு நேற்றுக் காலை விஜயம் செய்த அவர் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் மணிவண்ணன் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தினார்.

அவருடன் அவுஸ்திரேலியா நாட்டின் சிறிலங்காவுக்கான தூதுவராலயத்தைச் சேர்ந்த 3 ஆம் செயலாளர் வில்நன் கேர்விஸ் மற்றும் நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சின் வெளியுறவு, பாதுகாப்பு மற்றும் ஆயுதக் களைவுகளுக்கான பேச்சாளர் கெயிற்ஸ் லொக்கி ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

சிறிலங்கா அரசிற்கும்-விடுதலைப்புலிகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலில் உள்ள போதும் அதனால் தமிழ் மக்கள் முழுமையான பலாபலன்களை அடைய முடிய வில்லையென இச்சந்திப்பில் எடுத்துக்

(8ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரமற்ற இடைக்கால நிர்வாகத்தை புலிகள் ஏற்றுக்கொள்ளக் கூடாது

## கோரி கையெழுத்துப் பிரதிகள்

(செட்டிகுளம்)

அதிகாரமற்ற ஆக்கபூர்வமில்லாத இடைக்கால நிர்வாகத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடாது என விடுதலைப்புலிகளைக் கோரி கையெழுத்துப் பிரதிகளை அனுப்பி வைக்குமாறு வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாகத் துண்டுப் பிரசுரமொன்றை அது வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நீண்ட பெரும் போரின் பின்னர் சிறிது ஓய்வு ஒன்று கிடைத்து அதனூடாகப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு சமாதானச் சூழல் ஒன்று

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் தேவை

ஜெயபுரத்தில் உள்ள இளமுருகன் நிழற்படப் பிரதியாக்கல் தட்டச்சு நிறுவனத்திற்கு மேற்படி அனுபவமுள்ள ஒருவர் தேவை 15.11.2003 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். (சம்பளம் நேரில்) நிர்வாகி.
(3134)

### விற்பனைக்குண்டு

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை 2004 விண்ணப்பப்படிவம் கந்தபுரம், பிக்பென்ஸ் (வாணி) புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம். (சி-8681)

### N.E.C. கணினி பயிற்சி நிலையம்

மத்திய கல்லூரி முன்பாக கிளிநொச்சி கிளிநகரில் முன்னணி கணினி பயிற்சி நிலையம், கணினித் துறையில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்களால் புதிய பிரிவுகள் 02.11.2003 ஆம் திகதி ஆரம்பம். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் உங்கள் வாழ்வை வளப்படுத்தப் போகின்றது.
(3133)

## வீதி ஒழுங்கில் காவல்துறையினர்

முள்ளியவளைப் பிரதேச தமிழீழ காவல் துறையினர் முள்ளியவளைப்பிரதேசத்தில் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளை ஆரம் பித்துள்ளனர்.

மேற்படி நடவடிக்கையின் முதற் கட்டமாக பிரதேசத்தில் பிரதான வீதி ஓரங்களில் அமைந்துள்ள பாடசாலைகளின் முன்பாக பாடசாலை நேரங்களில் கடமையினை மேற்கொண்டுவருவதுடன் மக்கள் நெருக்கடியாக உள்ள இடங்களிலும் காவல் துறையினர் ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதால் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் எமது செய்தியாளரிடம் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (ஆ)

# லண்டன்சென்ற ஹக்கீம்குழு எரிக்சூல்கெய்மைச் சந்திப்பு

(கொழும்பு)

லண்டன் சென்றுள்ள ரவூப்ஹக்கீம் தலைமையிலான அரசியலமைப்பு குழுவினர் நேற்று முன்தினம் நோர்வேயின் சமாதானத்தூதுவர் எரிக்சூல் கொய்மைச் சந்தித்துக்கலந்துரையாடியுள்ளனர். கடந்த வியாழக்கிழமை லண்டன் சென்ற இக்குழுவினர் சமஷ்டி ஆட்சிபற்றி ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றனர். பொதுநலவாய வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (32)

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணின் முத்தாக
25
12
1969



மண்ணில் வித்தாக
30
10
1995

### லெப். கேணல் அகிலா

(சோமசுந்தரம் சத்தியதேவி)

**30-10-2003**

சூரியக்கதிரில் - எங்கள்
சூரியப் புதல்வியை இழந்தோம் - நாம்
துறையாடப்பட்டவர்களாய் இருக்கவில்லை-நீ தந்த
நுட்பமங்களைக் கொண்டு
சுடர் விடுகின்றோம்.

புலனாய்வுத்துறை மகளிர் மாவீரர்களை நினைவு கூரும் இன்றைய நாளில் அனைத்து மாவீரர்களையும் அஞ்சலிக்கின்றோம்.

*புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.*

(3506) போராளிகள்

## இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு

எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். உணவக ஓடருக்கு சுத்தம் செய்து கொடுக்கப்படும்.

இடம்: 155ஆம் கட்டை, விவேகானந்த நகர்,கிளிநொச்சி, புலிகளின் குரல் நடுவப்பணியக முன் ஒழுங்கை (தூரம்300 M) (3136)

## துயர் பகிர்கின்றோம்

### திருமதி. ஸ்ரீநிவாசக்குருக்கள் சாரதாம்பாள்

மாங்குளம் மாவடி சித்தவிநாயகர் ஆலய பிரதமகுரு திருஞானசம்பந்த சர்மாவின் அன்புத் தாயாராகிய திருமதி ஸ்ரீநிவாசக்குருக்கள் சாரதாம்பாள் 25-10-2003 சனிக்கிழமை வவுனியாவில் காலமாகிவிட்ட துயரச் செய்தி அறிந்த நாம் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

தகவல்:
காவேரி பல்பொருள் வாணிபம்,
மாவடிப்பிள்ளையார் களஞ்சியம்,
யாழ். வீதி, மாங்குளம்.
(3131)

## சாவு அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சிவலோகநாதன் (சிவம்)

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் இல.1 41 பாண்டியன்குளம் வவுனிக்குளத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவலோகநாதன் (சிவம்) அவர்கள் 29.10.2003 நேற்று அகாலமரணமடைந்துள்ளார். இவர் நெடுந்தீவு மேற்கு கணபதிப்பிள்ளை பத்தினிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் கனக லட்சுமியின் அன்புக்கணவரும் செந்தூரன் (கிளைமுகாமையாளர் பனங்காமம் பற்று ப.நோ. கூ.சங்கம் ) அகிலன்(பாண்டியன்குளம்), சுந்தர், சுஜன், வேக்சன், (பாண்டி யன்குளம் ம.வி.)ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 30.10.2003 இன்று பிற்பகல் 02.மணிக்கு பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றோம்.

தகவல்:-
**சி.செந்தூரன்**
(மகன்)

இல.141,
பாண்டியன்குளம்,
வவுனிக்குளம்.

(சி-8680)

## தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை
## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் (NCICT)

**தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் திறமைகள் வளர்த்துக் கொள்வதற்கான திட்டத்தின் கீழ் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1) *கல்வித் தகைமை –* *க. பொ. த. (சா/த) இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தி. (கணிதம், ஆங்கிலம் பாடங்களில் திறமைச் சித்தி உட்பட)*
2) *வயதெல்லை –* *16–25 (01–01–2004 இல்)*
3) *கட்டணம் –* *ரூபா 3000/=*
4) *பயிற்சிக் காலம் –* *6 மாதங்கள் (முழு நேரம்)*
5) *விண்ணப்ப முடிவுத்திகதி–* *நவம்பர் 15–2003*
6) *பயிற்சி நடைபெறும் நிலையங்கள் –*
   - முல்லைத்தீவு
   - வட்டுக்கோட்டை
   - யாழ்ப்பாணம்
   - வவுனியா

முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தே. அ. அட்டை இல., சித்தியடைந்த பாடங்களுடன் கல்வித் தகைமை, விரும்பிய பயிற்சி நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தைக் கீழ்கண்ட முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு – 29–06–2003 பத்திரிகை விளம்பரத்திற்கமைய விண்ணப்பித்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

**முகவரி : மாகாணப் பணிப்பாளர்,**
**தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை,**
**இல. 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல. 021-2222383** (3135)

## வாடகை(மகிழுந்து) ஊர்திகள் புதிதாகக் கொள்வனவு செய்வோர் கவனத்திற்கு

மேற்படி ஊர்திகள் கொள்வனவு செய்வோர் பயணியர் போக்குவரவு ஊர்தி வழியனுமதிப் பணியகம் புதுக்குடியிருப்புடன் தொடர்பு கொண்டு உறுதிசெய்த பின் கொள்வனவு செய்வது அவருக்கு நன்மை தரும் என்பதையும்,

அல்லாமல் கொள்வனவு செய்யப்படும் ஊர்திகள் பணிக்கு அனுமதிக்க முடியாத சிக்கலைத் தோற்றுவிக்கக் கூடும் என்பதையும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

**முகாமையாளர்,**
**பயணியர் போக்குவரவு ஊர்தி,**
**வழியனுமதிப் பணியகம்.**

(சி-8679)

## 5ஆம் ஆண்டு நினைவில்...

பிறப்பு
17
11
1978



வீரச்சாவு
30
10
1998

### கடற்புலி கப்டன் இளங்கதிர்

தனபாலசிங்கம் ஜெகதீஸ்
(ஜெயந்தா)
வேம்படி உடுத்துறை

அன்னமிட்ட கையும் உனை சுமந்த தோளும்
அன்பொழுக ஜெந்தா என சுற்றி வந்த உறவினரும்
கண்ணம்நனைக்கும் நீரோடு இன்னும் தேடுகின்றோம்
நீயில்லை எமதருகே. வேம்படிக்கு பெருமை சேர்க்க
இளங்கதிர் என்னும் பெயர் சூடி
வரிப்புலிக்குள் நீ புகுந்து ஆற்றிய சாதனைகள்
உனைச் சாக விடவில்லை சரித்திரத்தில்
வாழ வைத்தனர் என்பதால் நாமும் வாழ்கின்றோம்.

த.முகவரி
இளஞ்சோலை அழகுமாடம்.
முல்லை. வீதி,
புதுக்குடியிருப்பு.

(3720)

குடும்பத்தினர்.

# பலஸ்தீனத்தில் மீண்டும் அதிகாரப் போட்டி புதிய அமைச்சரவை அமைப்பதும் இழுபறியில்!

## தீவிரவாத இயக்கங்கள் பேச்சிற்கு இணங்கின

**பலஸ்தீனத்தில் நிரந்தரமான அமைச்சரவையொன்றை உடனடியாக அமைக்குமாறு பலஸ்தீனப் பிரதமர் அகமத் கூரியிடம்சனாதிபதி யசீர் அரபாத் கேட்டுக்கொண்டுள்ளார். எனினும் இந்த வேண்டுகை நிறைவேற்றப்படுவதில் புதிய நெருக்கடிகள் தலை தூக்கியுள்ளன.**

பலஸ்தீனத்தில் அவசரகால அமைச்சரவையொன்று ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த போதிலும் அதன் ஆயுட்காலம் 30 நாட்கள் என்பதால் அதன் கால எல்லை நவம்பர்மாதம் 4ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது.

இந்தநிலையில், புதிய அமைச்சரவை அமைக்கப்படுவதற்கு முன்பாக பலஸ்தீனப்பிரதமர் அகமத் கூரி அதிக அதிகாரங்களை அரபாத்திடமிருந்து எதிர் பார்த்துள்ளார். குறிப்பாக நிரந்தர அமைச்சரவையொன்று அமைக்கப்படுவதற்கு முன்னர் பாதுகாப்புத் தரப்பினரை கட்டுப்படுத்தும் விவகாரத்துக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். எனினும் இது குறித்து சனாதிபதி யசீர் அரபாத் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை.

பலஸ்தீன பிரதமராக முன்னர் பதவி வகித்த மகமூத் அபாஸ் கூடுதல் அதிகாரங்களைக் கேட்டே அது கைகூடாத நிலையில் பதவி விலகினார்என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க; பலஸ்தீனத்தில் செயற்படும் ஆயுதக் குழுக்கள் பலஸ்தீன ஆட்சியாளர்களோடு பேசுவதற்கு இணங்கியுள்ளதாக பிரதமர் அகமத் கூரி கூறியுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் மீதான தாக்குதலை இக் குழுக்கள் நிறுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு இணங்கியுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

எனினும் பேச்சுவார்த்தைக்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. இஸ்லாமிய குழுவினரும், ஹமாஸ், ஜிகாத் ஆகியனவும் இப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். பேச்சுக்கான திகதி நிர்ணயிக்கப்படாத போதிலும் பேசித்தீர்க்கும் மனநிலை உருவாகி தொடர்வதாக அவர் கூறியுள்ளார்.

## கண்டனம்

சவுதி அரேபியாவுடன் எதுவித ஆலோசனைகளும் மேற்கொள்ளாமல் பிரிட்டன் தனது மக்களுக்கு பயணத்தடை விதித்தமைக்கு சவுதி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.சவுதியை பயங்கரவாதத்தளமாக பிரிட்டன் காட்டமுற்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



கார்க் குண்டுவெடிப்பில் சேதமுற்ற பாக்தாத் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்தினருக்காக சிற்றுண்டியடங்கிய கூடையை எடுத்துச் செல்லும் ஈராக்கிய சிறுவன் .

# லத்தீன் அமெரிக்க நாடுகளின் வளர்ச்சிக்கு செயற்பட இணைந்து அமெரிக்கா அழைப்பு!

பொருளாதார மறுசீரமைப்பு சுதந்திர வர்த்தகம் ஆகியவை தொடர்பான ஒருமித்த வளர்ச்சிக்கு அமெரிக்கா லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அதேவேளை போதைப் பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த கூட்டாக செயற் பட அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது. மெக்ஸிகோவில் இடம் பெற்ற பிராந்திய பாதுகாப்பு மாநாட் டில் அமெரிக்காவின் பிரதிநிதியாக கலந்து கொண்ட மாஸ்கோஸ்மன் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், வறுமை மனிதவுரிமைமீறல், சட்டதுஷ் பிரயோகங்கள், பயங்கரவாதம் ஆகியன பாதுகாப்பின்மையை உருவாக்குவதாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா ஒன்றிணைந்த ஒருமித்த வர்த்தக உறவுகளை விஸ்தரித்துக்கொள்ள விரும்புகிறது. லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் இணைந்து ஜனநாயக மேம்பாட்டைஉருவாக்க புஷ் விரும்புவதாக அவர் மேலும் கூறியுள்ளார். இத்தகையதோர் ஒருமித்த செயற்பாடு நாடுகளின் அரசியல் ஸ்திரத்தை உருவாக்குமென கருத்துத் தெரிவித்துள்ளார்.ஆயினும் லத்தின்அமெரிக்கா அமெரிக்காவின் எண்ணங்களிலிருந்து மாறுபட்டு செயற்படுகிறது அமெரிக்காவின் சுதந்திரவர்த்தக பொருளாதார அமைப்பை லத்தீன் அமெரிக்க நாடுகள் ஏற்றுக்கொள்ளும் நிலையிலும் இதுவரையில் இல்லையென கருதப்படுகிறது.

அமெரிக்கா மீது செப்ரெம்பர் 11ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்கா முன்வைத்து வரும் ஒருமித்த கொள்கைகள் அனைத்து அயல்நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதையே இது சுட்டிக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.



கடந்த திங்களன்று பாக்தாத் பொலிஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுவெடிப்பில் சேதமுற்றபொலிஸ் நிலைய இடிபாடுகளை அகற்றும் தொழிலாளர்கள்.

## யுத்த செலவீனங்களை பிரிட்டன் குறைக்க முடிவு

பிரிட்டன் ஆயுதப் படைகள் நிதிப் பற்றாக்குறையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டன் அதன் யுத்த நடவடிக்கைகளுக்கான செலவுகளை எதிர் வரும் ஆண்டுகளில்பெரிதும்குறைத்துக்கொள்ள இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டனின் ஆயுதப் படைகளுக்கென இங்கிலாந்து திறைசேரி இந்த ஆண்டு 31 பில்லியன் பவுண்களை ஒதுக்கியுள்ளது.

## சமாதானப் பேச்சை வலியுறுத்தி 1,60,000 பேர் கையொப்பம்

இஸ்ரேல் -பலஸ்தீன தரப்பினரிடையேமீண்டும் சமா தானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி சுமார் 1,60,000பேர் கையெ முத்திட்டுள்ளனர். ஒரு இலட்சம் இஸ்ரேலியர்களும் 60ஆயிரம் பலஸ்தீனர்களும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்என்பதை வலியுறுத்தி கையொப்பங்களை இட்டுள்ளனர். இந்த நடவடிக்கையை ஐ.நா. பொதுச் செயலாளர் கொபிஅனான் வரவேற்றுள்ளார்.

## வேண்டுகோள்


இஸ்ரேலுடனான பதற்ற நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு கொலின்பவல் -சிரியாவைக் கேட்டுள்ளார்.

இஸ்ரேலிய தாக்குதல்களுக் குப் பதிலடி கொடுக்கப்போவ தாக சிரிய நாட்டு அதிகாரி ஒருவர் எச்சரிக்கை விடுத்தபின்னர்இவ் வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

## பாகிஸ்தான் அபிப்பிராயத்திற்கு இந்தியா கடும் ஆட்சேபம்

அமைதியை ஏற்படுத்துவதற்காக இந்தியா அண்மையில் தெரிவித்த யோசனைகள் பற்றி பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சரக அதிகாரி வெளியிட்டுள்ள கருத்துக்கள் துரதிர்ஷ்டவசமானவை என புதுடில்லி வர்ணித்துள்ளது.

இக் கருத்துக்கள் அமைதி யோசனைகள் வெளியிடப்பட்ட சமரசஉணர்விற்குப் பொருத்தமானதல்ல என இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானுடன் மக்களுக்கு மக்கள் என்ற வகையிலான தொடர்பை மேம்படுத்துவதற்காக அண்மையில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் சிலவற்றை இந்தியா ஏற்கனவே அமுல்ப் படுத்தத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாகிஸ்தானில் புனித ரம்ழான் மாதத்தை வரவேற்கும் வகையில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வின் போது காவலில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் பொலிசார்.

# வட-கிழக்கு மாநிலங்களின் கிளர்ச்சியாளரை பேச்சுக்களுக்கு பிரதமர் வாஜ்பாய் அழைப்பு

(புதுடில்லி)

வட-கிழக்கு மாநிலங்களின் கிளர்ச்சிக்குழுக்கள் வன்முறையைக் கைவிட்டு பேச்சுவார்த்தைகளுக்கு முன்வரவேண்டுமென பிரதமர் வாஜ்பாய் கேட்டுள்ளார்.

நீடித்துவரும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பதற்கு ஏதுவாக சண்டையில் ஈடுபடும் பிரிவுகள் ஒன்றிணைந்து அமைதித் திட்டத்தில் இணையவேண்டுமென அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். நாகலாந்து மாநிலத்திற்கு முதன்முறையாக சென்றுள்ள வாஜ்பாய் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் வன்முறையை விட்டொழிக்கும் அனைவருடனும் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தும் எனக் கூறியுள்ளார்.சண்டையிடும்பலபிரிவினர் தமதுபிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்ளவேண்டுமென அவர்மேலும் கூறியுள்ளார்.



சர்வதேச விண்வெளி நிலையத்தினரால் எடுக்கப்பட்ட கலிபோர்னிய காட்டுத்தீயின் படம்.

# பொடோ மறுஆய்வுக்குழுவுக்கு சட்ட அதிகாரம்; திருத்தப் பிரகடனம் குடியரசு தலைவரால் வெளியீடு

(புதுடில்லி)

பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க பொடோ மறு ஆய்வுக் குழுவிற்கு சட்டபூர்வ அதிகாரம் அளிக்கும் திருத்தப் பிரகடனத்தை குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளார். வாஜ்பாயின் தலைமையில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

பொடோ சட்டத்தின் 60 ஆவது பிரிவில் செய்யப்பட்டுள்ள இத் திருத்தத்திற்கு அமைய பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் கண்டித்துள்ளதுடன் அவர்களை அச்சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொடோ சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டதன் மூலம் அறிவிக்கப்படும் இவ் அதிகாரத்திற்கிணங்க மத்திய மறு ஆய்வுக் குழுவின் முடிவே இறுதியானதெனவும் கூறியுள்ளார். இம்முடிவிற்கு மத்தியமாநில அரசுகளும்,புலனாய்வு அமைப்புக்களும் கட்டுப்படவேண்டு மெனவும் கூறியுள்ளார்.

# மக்களுக்குப் பெரும் தீங்காக அமைந்துள்ள வன்னிப் பெருநிலப்பரப்பு வீதிகளின் புனரமைப்பு

வன்னிப் பெருநிலப்பரப்பில் தற்பொழுது மேற்கொள்ளப்பெற்றுவரும் வீதிப் புனரமைப்புப்பணிகளினால் மக்களுக்கு நன்மையளிப்பதனை விடுத்து பாரிய தீங்கினை அவை விளைவிப்பவையாகவே அமைந்துள்ளதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

கடந்த பல வருடகாலமாக வன்னிப் பெருநிலப் பரப்பில் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பெற்று வந்த இராணுவ நடவடிக்கைகள் மற்றும் திட்டமிட்ட வீதி மீள் புனரமைப்புப் புறக்கணிப்புக்கள் காரணமாக இங்குள்ள பிரதான வீதிகள் முதல் உள்ளூர் வீதிகள் யாவும் சேதமுற்று மக்கள் போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாதவாறு சிதைவுநிலைக்குள்ளாகியே காணப்பட்டது.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதற்கமைவாக தற்காலிக வீதிப் புனரமைப்புப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பெற்றது.

குறிப்பாக ஏ-9நெடுஞ்சாலையில் முதற்கட்டப் புனரமைப்புப்பணிகள் ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து பிரதான உள்ளூர் வீதிகள் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பெற்று தற்பொழுதும் புனரமைப்புப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.



இதில் ஏ-9 பிரதான நெடுஞ்சாலை வீதிப்புனரமைப்புக்கும் உள்ளூர் வீதிப் புனரமைப் பிற்கும் பாரிய வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

ஏ-9 நெடுஞ்சாலையானது கிரவல் மண்ணைக் கொண்டும் கற்களைக்கொண்டும் புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பெற்று 'தார்' கொண்டு செப்பனிடப்பட்டு வருகின்றது.

ஆனால் உள்ளூர் வீதிகளோ அதனில் நின்றும் முற்றுமுழுக்க வேறுபாடான முறையில் புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அதாவது கிரவல் மண்ணினால் மட்டுமே இவ்வீதியில் ஏற்பட்டுள்ள பாரிய குன்றுகுழிகள்யாவும் சீர்செய்யப்பெற்று வீதி செப்பனிடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்காரணமாக இக்கிரவல் வீதிகளில் பயணிப்பவர்கள் பல அசௌகரியங்களை தினம்தினம் எதிர்கொண்டு பயணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகிவருகின்றனர்.

இவ்வீதிகளில் ஒரு குறிப்பிட்ட வேகத்தினைவிட அதிவேகமாகப் பயணிக்கும் வாகனங்களினால் வீதியிலுள்ள கிரவல் தூசுகள் மேலெழுந்து ஒரு குறிப்பிட்ட நிமிடங்களுக்கு வீதியினைத் தெரியாதவாறு மறைத்துவிடுகின்றது.

அதேபோன்று ஒன்றன் பின் ஒன்றாக நாலைந்து வாகனங்கள் இவ்வீதியால் அதிவேகமாகப் பயணிக்கும் பட்சத்தில் இவ்வீதியில் பயணிக்கும் அனைவரும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு செய்வதறியாது திணறுவதனை அவதானிக்க முடிகிறது.



இதன் காரணமாக அதே நேரத்தில் வீதியில் பயணம் மேற்கொள்பவர்கள் மூச்செடுக்க முடியாது கிரவல் தூசிகள் கண்களை மறைக்க பயணத்தினைத் தொடர்ந்தும் மேற்கொள்ளமுடியாது படும் அவலமானது சொல்லிலடங்காது.

இவ்வீதிகளில் இந்நிலை தொடர்கதையாகவே அமைந்து வருவதன் காரணத்தினால் இவ்வீதிகளில் பயணிப்பவர்கள் முதல் வீதியினை அண்டிய பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்களும் நிரந்தர சுவாசக் கோளாறுகளுக்குள்ளாக வேண்டியவர்களாகின்றனர்.

குறிப்பாக காலை, மாலை நேரங்களில் இவ் வீதிகளூடாகப் பயணிக்கும் பாடசாலைச் சீருடைச் சிறார்கள் முதல் திணைக்கள நிறுவன ஊழியர்கள் வரை மேலெழும் புழுதியிலிருந்து தங்களின் உடைகளைக் காப்பாற்றப்படும் பிரயத்தனம் சொல்லிடங்காதவை.

இந்த நிலையானது இவ்வீதியில் பயணிக்கும் பயணிகளை நிரந்தர நோயாளியாக்குவதுடன் வாகனவிபத்துக்கள் ஏற்பட வாய்ப்புண்டாக்குவதுடன் அநியாயமாக மக்களை அங்கவீனமாக்குவதாகவும் அநியாய உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்கும் வழிசமைத்துவிடுகிறது.

இந்த வாகன ஓட்டுநர்களது பொறுப்பற்ற தன்மையானது மக்களின் மனங்களை எவ்வளவு புண்படுத்துகின்றது, வேதனைக்குள்ளாக்குகின்றது என்பதனை இவர்கள் ஏன் சிந்தனையில் உள்வாங்க மறுக்கின்றனர் என்பது இன்று கேள்விக் குறியாகவே அமைகின்றது.



தங்கள் வாகனங்களின் கண்ணாடிகளைச் சீர்செய்துவிட்டு தங்களை மட்டும் தூசியினின்றும் காப்பாற்றிக் கொண்டு வேகமாக வாகனத்தினைச் செலுத்திச் செல்லும் இவ்வாகன ஓட்டிகள் தங்கள் செயலினால் வீதியில் பயணிக்கும் மக்கள்படும் அவலநிலையினைப் பற்றி கருத்தில் எடுத்துக் கொள்வதற்குத் தயங்குவதேன.

இவ்வீதிகளில் வாகனங்களைச் செலுத்திச்செல்லும் ஒவ்வொரு வாகன ஓட்டியின் மனதிலும் இது குறித்து விழிப்புணர்வு ஏற்பட்டு அவர்களாக மக்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு வாகனங்களைச் செலுத்திச் செல்லும்வரை இவ் வீதிகளில் பயணிக்கும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலைக்கு விடிவு என்பது சாத்தியப்பாடற்ற தொன்றாகவும் கேள்விக் குறியாகவுமே அமையப்போகின்றது.

எனவே இவ்வீதிகளில் பயணிக்கும் மக்கள் யாவரும் இப்பேர்ப்பட்ட அவலங்களுக்கு முகங்கொடுக்காது சுதந்திரமாகப் பயணிக்க வேண்டுமெனில் அதற்கான விடை இவ்வீதிகளில் வாகனங்களை ஓட்டிச்செல்லும் ஒவ்வொரு வாகனங்களின் ஓட்டுநர்களின் மனங்களிலேயே தங்கியுள்ளது.

மற்றும் நகரத்தை அண்டியுள்ள கிரவல் வீதிகளுக் கருகாமையில் அமைந்துள்ள உணவுச்சாலைகள், வாணிபநிலையங்கள் மற்றும் அரச, தனியார் மருத்துவமனைகள், பாடசாலைகள் என்பன கிரவல் தூசிப்படலத்தினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது.

உணவுச்சாலைகளிலுள்ள உணவுகளில் தூசிகள் படிவதன் காரணத்தினால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதற்கு வாய்ப்பேற்படுவதுடன், பயனாளிகளான மக்களுக்குப் பாரிய சுவாச மற்றும் கண்நோய்த்தாக்கம் ஏற்படக்கூடிய வாய்ப்பு உருவாகிவருகின்றது. அண்மைக்காலத்தில் சுவாச வழி நோய்களுக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரித்துச் செல்வதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன் உலர் உணவு விற்பனை வாணிபநிலையங்களில் மேற்படி தூசுப்படலம் படிவதனாலும் பயனாளிகளான மக்களுக்கு நோய்த்தாக்கங்கள் ஏற்படும் அபாயம் உருவாகக் காரணியாகவுள்ளது. அதேபோன்று புடைவை வாணிப நிலையங்களில் இதன் காரணமாக நிறம் மாற்றம் அடைவதுடன் அவர்களின் வியாபார நிலையங்களுக்கு பின்விளைவுகளை ஏற்படுத்திவருவதன் காரணத்தினால் இவ் வியாபார நிலையத்தினர் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மருத்துவமனைகளில் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளச் செல்லும் நோயாளர்கள்முதல் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் தினம்தினம் எதிர்கொள்ளும் அசௌகரியம் என்பது எடுத்தியம்ப இயலாதவை. அதேபோன்றுதான் பாடசாலைகளின் நிலைமையும் கூட. எனவே இப்படியான நிலையங்கள், திணைக்களங்கள் அமைந்துள்ள பகுதிகளை அண்டிய பகுதிகளிலுள்ள கிரவல் வீதிகளையாவது தார் ஊற்றி செப்பனிட்டு கிரவல் தூசிப்படலத்திலிருந்து அனைவரையும் காப்பாற்ற சம்பந்தப்பட்டவர்கள் திடசங்கற்பம் பூணவேண்டுமென்பதே வன்னிவாழ் மக்களின் எதிர்பார்ப்புக்களாகவும் மக்களின் சுகவாழ்விற்கும் கட்டியம் கூறுவதாகவும் அமையும் என்பது திண்ணமாகும்.

**கனகபுரச் சோதி**

# கிளிநொச்சி மக்கள் வங்கி கிளையில் அடகு நகைகளை மீட்க முடியாத அவலம்!

## - பல மாதங்களாகியும் நகைகள் கிடைக்காது பலர் ஏமாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மக்கள்வங்கிக் கிளையில் நகை அடகினை மீளப் பெறுவதற்குப் பணத்தினைக் கையளித்து ஒருவருடம் பூர்த்தியடையவுள்ள நிலையிலும் உரித்துடையவர்களுக்கு வங்கியினால் இன்று வரை நகைகள் மீளளிக்கப்படவில்லையெனத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கிளி.மக்கள் வங்கியில் நகை அடகினை மேற்கொண்டு மீளப்பெற பணத்தைச் செலுத்திய நபரொருவர் தனக்கேற்பட்டுள்ள நிலை குறித்து எமது செய்தியாளரிடம் தெரிவிக்கையில்,

கடந்த 1983ஆம் ஆண்டு காலப் பகுதியில் அவசர விவசாய தேவையின் பொருட்டு கிளி. மக்கள் வங்கிக் கிளையினரால் நகை அடகு ஏற்கப்பட்டு பணம கையளிக்கப்பட்டது. அப்பணத்தின் மூலம் எனது விவசாயப் பணிகளை மேற்கொண்டேன். அதன் பிற்காலப்பகுதியில் நகையினை மீளப்பெறச் சென்றபொழுது பாதுகாப்புக் காரணம் கருதி நகைகள் கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என வங்கியினரால் கூறப்பட்டதற்கமைவாக நகையினை மீளப்பெறுவதற்கான பணத்தினை செலுத்தாது திரும்பி வந்தேன்.

பின் 2002ஆம் ஆண்டு மேற்படி நகைகள் மீளப் பெறவிருப்பவர்கள் பணத்தை வங்கியில் செலுத்தும் பட்சத்தில், ஒரு மாதத்தில் உரியவர்களுக்கு நகைகள் கையளிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பத்திரிகைகள் மூலம் தெரிவித்ததற் கிணங்க இவ்வருடம் ஜனவரி மாத முற்பகுதியில் நகையினை மீளப்பெறும பொருட்டு கிளி.மக்கள் வங்கிக் கிளையில் பணத்தினைச் செலுத்தினேன். என்போன்று மேலும் பலரும் நகைகளை மீளப்பெறும் பொருட்டு பணத்தினைச் செலுத்தினர்.

பின் பெப்ரவரி மாதம்முதல் இன்று வரை வங்கிப்படியேறி இறங்குவதைக் கண்டதே ஒழிய நகை இன்னும் எனக்குக் கையளிக்கப்படவில்லை.

இப்பொழுது கையில் இருந்த பணத்தையும் கொடுத்துவிட்டு சொந்தத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கென அடகு வைப்பதற்கு நகை கூட இல்லாது திண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதெனத் தெரிவித்தார்.(சோ)

# பேருந்துகள் நேருக்கு நேர் மோதின ஒருவர் பலி; 29 பேர் படுகாயம்!

கொழும்பிலிருந்து அட்டன் நோக்கிச் சென்ற சொகுசு பேருந்து ஒன்றும் அட்டனிலிருந்து வந்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றும் கினிகத்தேன, தியகல பகுதியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். 29 பேர் படுகாயமடைந்துள்ளார்கள்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை நடந்த இந்த விபத்தில் சொகுசு பஸ் பாதையை விட்டு விலகி 200 அடிப் பள்ளத்தில் வீழ்ந்தமையினால் 30 பேர் படுகாயமுற்றனர். இவர்கள் கினிகத் தேன, வட்டவளை, நாவலப்பிட்டி, ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்களில் நாவலப்பிட்டியில் அனுமதிக்கப்பட்டவர்களில் பெண்ணொருவரே இறந்துள்ளார். கினிகத்தேன பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# 'பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு'

# மகிழ்ச்சியில் பேரினவாதச் சக்திகள்

சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் இறுதியான இந்திய விஜயம், அவரது அரசாங்கத்திற்கும், ஏன் சிங்கள அரசியல்வாதிகள், பேரினவாதச் சக்திகள் எனப் பல தரப்பிற்கும் மகிழ்ச்சி அளிப்பதாக அமைந்திருந்தது. இதனை இவ்விஜயம் தொடர்பான தென்னிலங்கையில் வெளியாகும் அபிப்பிராயங்களே தெளிவுபடுத்துபவையாக வுள்ளன.

எதிர்க்கட்சி என்றால் எதிர்ப்பது மட்டுமே என்ற நிலைப்பாட்டுடன் செயற்படும் எதிர்க் கட்சியான பொ.ஐ.முன்னணி தனது நிலைக்கு மாறாக இவ் ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளது. இதேபோன்று ஜே.வி.பி.யும், இவ் ஒப்பந் தத்தை எதிர்க்கவில்லை. ஆதரவான நிலைப் பாட்டைக் கொண்டுள்ளது. இது மட்டுமல்ல, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இவ் ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளது.

ஆளும் கட்சி மேற்கொண்டுவரும் சமா தான முயற்சிகளுக்குத் தமது எதிர்ப்பை வெளிக்காட்டிவரும் சனாதிபதி சந்திரிகாவும் அவரது தலைமையிலான பொ. ஐ. முன் னணியினரும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் இறுதி இந்திய விஜயம் குறித்துத் திருப்தி கொண்டவையாகவே உள்ளனர். இவ் வாறு திருப்தி கொண்டுள்ளமைக்கு இந்திய அரசிற்கும்-சிறிலங்கா அரசிற்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்று தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப் பதற்கு இரு தரப்பும் இணக்கம் கொண்டுள் ளமை மட்டுமே காரணமாகும்.

சிறிலங்கா அரசிற்கும், இந்தியாவிற்கும் இடையிலான இப்பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன் பாடு எத்தகைய அம்சங்களைக் கொண்டதாக இருக்கும் என்பது குறித்த சாராம்சங்கள் இன்னும் வெளிவரவில்லை. ஆயினும், இவ் உடன்பாடு சில குறிப்பிட்ட வரம்புகளுக்கு மேம்பட்டதாக இருக்கும் எனத் துணிந்துகூற முடியும். ஏனெனில், இந்தியாவிற்கும் சிறி லங்காவிற்கும் இடையிலான பாதுகாப்பு ஒத் துழைப்புத் தொடர்பான பல விடயங்கள் ஏற் கனவே அமுலில் உள்ளன.

1) இராணுவப் பயிற்சியும் ஆலோசனைகளும் வழங்குதல்.
2) தகவல் பரிமாற்றம், தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடாதஇரா ணுவ ரீதியிலான ஒத்துழைப்பு.

கோணமலைத்துறை முகத்தில் இந்தியக் கடற்படைப் பிரிவு ஒன்றை நிலை நிறுத்துவ தில் இருந்து பலாலி விமானப்படைத் தளத்தை விஸ்தரிப்பது வரையில் - அதாவது, நவீன போர் விமானங்கள் இறங்கி ஏறுவதற்கு ஏற்ற வகையில் விஸ்தரிப்பது வரையில் பாது காப்புத் தொடர்பான தீர்மானங்களை உள்ள டக்கியதாக இருக்கும் என ஆருடங்கள் கூறி யுள்ளன.

இதேவேளை, இந்தியாவிற்கும், சிறிலங்கா விற்கும் இடையில் இத்தகையதொரு ஒப்பந் தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடை பெறவுள்ளதோ அன்றி உடன்பாடு ஒன்று எட்டப்படுவது குறித்தோ ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை. ஏனெனில் ஒருபுறம், இப் பிராந்தியத்தில் இராணுவ, அரசியல், பொரு ளாதார ரீதியில் தனது செல்வாக்கு- ஆளுகை என்பனவற்றைப் பேணுவதில் இந்தியாவும், விடுதலைப்புலிகளை இராணுவ, அரசியல், இராஜதந்திர ரீதியில் பலவீனப்படுத்தும் நோக் கில் செயற்படும் சிறிலங்கா அரசாங்கமும் இத்தகையதொரு முடிவிற்கு வந்துள்ளமை என்பதும் எதிர்பார்க்கத்தக்கதே.

ஆனால், தற்பொழுது - அதாவது, விடு தலைப்புலிகள் இயக்கம் இடைக்கால நிர் வாகக் கட்டமைப்புக் குறித்த ஒரு திட்ட நகல் வரைவு ஒன்றை முன்வைக்கத் தயாராகி வரும் நிலையில், இத்தகையதொரு இணக் கப்பாடு குறித்த அறிவிப்பை வெளியிடு வதுதான் முக்கியமானதொரு விடயமாகும். ஏனெனில், அரசியல், இராஜதந்திர ரீதியில் இது பெரும் பரிமாணம் முக்கியத்துவம் மிக்க தாகும்.

இந்தியாவும், சிறிலங்காவும் பாதுகாப்புத் தொடர்பான உடன்பாட்டிற்கு வருதல் அன்றி அது குறித்த பேச்சுவார்த்தைகளை ஆரம் பித்தல் என்ற நிலையைத் தற்பொழுது எட்டி யிருப்பினும், இவ் உடன்பாடு குறித்து ஆரம் பத்தில் சிறிலங்கா அரசாங்கமே ஆர்வம் காட் டியதெனலாம். மேலும், சனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முன்னணி அரசாங் கம் ஆட்சியில் இருந்த காலத்தில் இருந்து இவ் அக்கறை காட்டப்பட்டது.

குறிப்பாக, விடுதலைப்புலிகளின் கடல்வழி ரீதியிலான சர்வதேச தொடர்புகளைத் துண் டிக்கும் வகையில் இந்தியாவிடம் இராணுவ ரீதியிலான குறிப்பாக கடற்படையின் உதவி பெற்றுக்கொள்வதற்கான தீவிர முயற்சி மேற் கொள்ளப்பட்டது.

இந்தியாவும் இவ்விடயத்தில் சிறி லங்காவிற்கு ஒத்துழைக்க முன்வந்ததாயினும், முழு அளவிலானதான ஒத்துழைப்பை அதா வது, சிறிலங்கா கோரியது போது கூட்டுக் கடற்படை ரோந்து நடவடிக்கை போன்ற மிக நெருக்கமான ஒத்துழைப்பை வழங்கவில்லை. ஆனால், சிறிலங்காக் கடற்படைக்கும், இந்திய கடற்படைக்கும் இடையிலான தகவல் பரி மாற்றம், சிறிலங்காக் கடற்படைக்கான ஆயுத தளபாட விநியோகம் மற்றும் பயிற்சி, ஆலோ சனை போன்றவற்றில் ஒத்துழைப்பு இருந்து வந்தது.

ஆனால், தற்பொழுது இவற்றிற்கு மேம் பட்டதான உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு இரு தரப்பும் பேச்சுக்களை நடாத்த முன் வந்துள்ளமையானது இந்திய அரசின் தீர்மா னத்தின் பாற்பட்டதாகவே கொள்ளத்தக்க தாகும். ஏனெனில், இந்திய வெளிவிவகார அமைச்சரின் கொழும்பு விஜயமும் அதனைத் தொடர்ந்து இந்தியாவின் அழைப்பின் பேரில் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயமும் இந்தியா இவ்விடயத்தில் ஆர்வம் வெளிப்பட்ட தன் விளைவு என்றே கொள்ளத்தக்கதாகும்.

ஆகையினால், இந்தியா இத்தகைய தொரு தீர்மானத்தை தற்போதைய சூழ்நிலை யில் மேற்கொண்டமையானது இலங்கையின் அரசியல், இராணுவ சூழ் நிலையுடன் பொருத் திப் பார்த்தல் என்பது தவறானதாக ஆகிவிட முடியாது. அதாவது, இனப்பிரச்சினையும் அதற்கான தற்போதைய சமாதான முயற்சிகள் என்பனவற்றுடனும் பொருத்திப் பார்த்தல் பிழையானதொரு பார்வையாக இருக்க முடி யாது.



இந்த வகையில், இந்தியா, சிறிலங்கா பாதுகாப்பு உடன்பாட்டிற்கான இணக்கமானது இனப்பிரச்சினை விடயத்தில் இரண்டு நோக் கங்களுடன் தொடர்புபட்டதாகிறது.

1) விடுதலைப்புலிகள் மீதான இராணுவ அழுத்தத்தைப் பிரயோகித்தல், ஒரு வகையில் அச்சுறுத்தல்.
2) தமிழ் மக்களின் உரிமைக் கோரிக் கைக்கு எல்லைகளை வகுத்தல்.

வேறு வகையில் கூறுவதானால், விடுதலைப்புலிகள் இயக்கம் மீது இராணுவ அழுத்தங்களைப் பிரயோகிக்காத வரையில், விடுதலைப்புலிகள் இயக்கம் தமது கோரிக் கைகளில் விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய மாட்டாது என்பது அவர்களின் நிலைப்பாடாக வுள்ளது. இந்நிலையில், பாதுகாப்பு உடன்பாட் டின் மூலம், விடுதலைப் புலிகளுக்கு இரா ணுவ ரீதியிலான அச்சுறுத்தல்களை அதா வது, இராணுவ ரீதியில் புலிகள் வெற்றிபெற இந்தியா அனுமதிக்கப்போவதில்லை என்பதே இவ் உடன்பாட்டின் மூலம் இந்தியா உணர் த்த முற்பட்டுள்ள விடயமாகவுள்ளது.

அடுத்ததாக விடுதலைப்புலிகள் இடைக் கால நிர்வாக சபைக்கான திட்ட வரைவைச் சமர்ப்பிப்பதற்குச் சிறிது காலம் முன்பாக இத் தகையதொரு உடன்பாடு குறித்து இந்தியா பேசி யிருப்பதானது, விடுதலைப்புலிகளின் கோரிக் கைகள் எத்தகையவையாக அமைதல் வேண் டும், இந்தியா எத்தகைய கோரிக்கைகளை அனுமதிக்கும், ஆதரவளிக்கும் என்பதை வெளிக்காட்டுவதாகவே இருக்க முடியும்.

இதனை உணர்த்துமாப்போன்று சிறி லங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்தியா வெளியிட்ட கூட்டறிக்கையும் அமை யப்பெற்றிருந்தது. அவ் அறிக்கையில், இனப் பிரச்சினைக்கான தீர்வானது, சகல சமூகங் களினதும் நலன்களையும் பாதுகாக்கத்தக்க தாக இருத்தல் வேண்டும் என வலியுறுத்தி யுள்ளதோடு, விடுதலைப்புலிகள் முன்வைக் கும் இடைக்கால நிர்வாக சபைக்கான திட்ட வரைவு இறுதித் தீர்விற்கானதாகவும் இருத்தல் வேண்டும் என்ற ரீதியில் அமையப்பெற்றுள் ளது.

இங்குதான் முக்கியமானதாகவும், இனப் பிரச்சினைத்தீர்வில் முரண்பாடாக எழக் கூடிய அம்சங்களும் வெளிப்படுகின்றன. ஏனெனில், இந்தியாவின், சிறிலங்காவுடனான பாதுகாப்பு உடன்பாடானது தமிழ் மக்களுக்கும், விடு தலைப்புலிகளுக்கும் விரோதமானது, பாதக மானது என்பதை நடு நிலைமையான ஆய்வா ளர்களே ஒப்புக் கொள்கின்றனர்.

அதாவது, பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட ஒரு தரப்புடன் அதிலும் குறிப்பாக, அடக்கு முறை சக்தியுடன் இராணுவ ரீதியிலான உடன் பாடு ஒன்றைச் செய்து கொண்டு, எதிர்த் தரப்பினர் இவ்வாறுதான் நடந்து கொள்ளுதல் வேண்டும் என இந்தியா கூறுவதானது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும், அவர் களின் உணர்வுகளுக்கும் எதிர்பார்க்கைக்கும் முற்றிலும் எதிரான நிலைப்பாட்டை அது மேற் கொண்டுள்ளதன் வெளிப்பாடாகவே கொள்ளத் தக்கதாகும். அதேவேளை, விடுதலைப்புலி களை இராணுவ ரீதியில் அச்சுறுத்துவதற்கும்



ஒப்பானதாகும்.

வேறு விதமாகக் கூறுவதானால், இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் சகல இனங்களினதும் நலன்கள் பாதுகாக் கப்பட வேண்டும் எனக் கூறும் இந்தியா, பெரும்பான்மை இனத்தின் கரத்தை வலுப் படுத்திக் கொண்டு, ஒடுக்கப்படும் மக்களின் கோரிக்கைகளுக்கு எல்லையிட முனைவ தானது இந்தியா இவ்விடயத்தில் நீதியுடனும், இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு ஒத்துழைக் கும் வகையில் நடந்து கொள்வதாகவும் கொள் வதற்கில்லை.

அத்தோடு, இந்தியாவின் இத்தீர்மானமானது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சி களுக்கு எதிராக விடுக்கப்பட்ட சவால் அன் றிப் பேரினவாத சக்திகளுக்குக் கொடுக்கப் பட்ட ஊக்கம் என்று கூடக் கூறலாம். இதன் காரணமாகவே எதிர்க்கட்சிகள் யாவும் இவ் உடன்பாட்டிற்கு வரவேற்பு அளித்துள்ளன. பேரினவாத சக்திகளும் மகிழ்ச்சி கொண் டுள்ளன. இந்தியாவினுடனான பாதுகாப்பு உடன்பாடு என்பது தமக்கு அதாவது, சிறி லங்காவின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமாக இருக்கும் என்ற ரீதியில் பேரினவாத சக்திகள் தமிழ் மக்களின் உரிமைக்கெதிரான நிலைப் பாட்டில் உறுதியாகவும் தீவிரமாகவும் இருப் பதற்கு இது உறுதுணையாகியிருக்கும்.

இந்த வகையில், இந்தியா, சிறிலங்கா அரசாங்கத்துடன் மேற்கொள்ளவுள்ள பாது காப்பு ஒத்துழைப்பு உடன்பாடானது, இல ங்கை இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு வாய்ப் பளிப்பதாக அமையப்போவதில்லை என்பது மட்டுமல்ல, இலங்கையின் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கியதாகிவிடும்.



ஆகையினால், இனி ஏற்படப்போகும் ஒப் பந்தமானது அதாவது, ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்களானது இதற்கு மேம்பட்டதாக இருக் கும் என்றே எதிர்பார்க்கலாம். ஆயினும், இது முழு அளவிலானதொரு பாதுகாப்பு ஒப்பந்த மாக அமையுமா அன்றி பாதுகாப்பு ஒத் துழைப்பு ஒப்பந்தம் என்ற எல்லைக்குட்பட்ட தாக மட்டும் அமையுமா என்பது குறித்துப் பலமான கேள்வி டில்லி ஆய்வாளர்கள் மட்டத்திலேயே உள்ளன.

ஆனால், இந்தியாவிலுள்ள முன்னணி ஊடகங்கள் இவ் ஒப்பந்தமானது, திரு

ஜெயராஜ்

**இலங்கை அரசு**
**வடக்கு கிழக்கு மாகாணம்**
**வடக்கு கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்**
**கடன் இல 2880 - சீ.இ.(C.E)**
**தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்**
**நிர்மாண வேலைகள்**

# மீள் கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி. (I.F.B)

**ஐ.எவ்.பி.இல: கிளி/நீர்ப்/01** **திகதி 30 - 10 - 2003**

01) வடக்கு கிழக்கு துரிதமீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. **(I.B.R.D)**கடன் வசதி, ஐ.டி.ஏ. **(I.D.A)** நம்பிக்கையின் கீழான வசதி.

02) அரசாங்க அதிபர், கிளிநொச்சி, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தாரர்களிடமிருந்து பின்வரும் கூட்டத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்ற

03) கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான, அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ **(Draft)** சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 01.12.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04) ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களைப் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு,
மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில்
பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம எந்திரி
மாகாண கட்டடங்கள் திணைக்களம்,
பழையகமம், முரசுமோட்டை,
பரந்தன், கிளிநொச்சி.

05) சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்வி திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டுப் பின்வரும் முகவரிக்கு 02.12.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.

06) வேறு விபரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்விக் குறியீட்டு இல | வேலை விபரம் | கேள்விப் பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கிளி/நீர்ப்/சுவே/1 | வைத்திய அதிகாரி விடுதி மீள்நிர்மாணம். சுற்றியற்கூறு,பளை வெளிநோயாளர் பிரிவு மீள்நிர்மாணம் | 53,300/= | 750/= | 04மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/2 | சுற்றியற்கூறு, பளை வெளிநோயாளர் பிரிவு மீள்நிர்மாணம் | 93,000/= | 750/= | 05மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/3 | சுற்றியற்கூறு, பூநகரி வைத்திய அதிகாரி விடுதி மீள் | 93,000/= | 750/= | 05மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/4 | நிர்மாணம், கரைச்சி. உதவி வைத்திய அதிகாரி விடுதி மீள் | 53,000/= | 750/= | 04மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/5 | நிர்மாணம், சுற்றியற்கூறு, பூநகரி. உதவி வைத்திய அதிகாரி விடுதி மீள் | 41,200/= | 750/= | 04மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/6 | நிர்மாணம், மத்திய மருந்தகம், வேராவில். பிரதேச செயலகமும் பிரதேச | 41,200/= | 750/= | 05மாதங்கள் |
| கிளி/நீர்ப்/பிசெ/1 | செயலாளருக்குரிய விடுதியும் மீள் நிர்மாணம், கரைச்சி,கிளிநொச்சி. உத்தியோகத்தர்களுக்கான விடுதி மீள் | 302,800/= | 1000/= | 15மாதங்கள் |
| கிளி/நீர்ப்/பிசெ/2 | நிர்மாணம், மாவட்ட செயலகம்,கிளி. | 132,200/= | 1000/= | 08மாதங்கள் |

07) கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புகள்04 பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒருதனி ஒப்பந்தத்துக்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

**தி.இராசநாயகம்**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச்செயலகம்,**
**கிளிநொச்சி.**

(சீ-8682)



## சிந்தனைக்கு

மலைபோல மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 30-10-2003

## யுத்தநிறுத்தத்தை முறியடிக்க...

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சனை வெளியேற்றிவிடுவது என்பதில் சனாதிபதி சந்திரிகா குறியாகவே உள்ளார். இதேவேளை, ரெலவ்சனை வெளியேற்றுதல் என்பது கண்காணிப்புக் குழுவிற்கு எதிரான நடவடிக்கை அல்ல. ரெலவ்சனின் செயற்பாட்டிற்கு எதிரான நடவடிக்கை மட்டுமே என்பது சனாதிபதி சந்திரிகா உலகிற்குக் காட்டவும் முற்பட்டு நிற்கின்றார்.

ரெலவ்சனை வெளியேற்றிவிடுதல் என்ற ரீதியில் சனாதிபதி சந்திரிகா மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது இனி யார் விரும்பினும், ரெலவ்சன் இப்பதவியில் நீடிப்பதில் அர்த்தமில்லை என்பது போன்றதொரு நிலையையே தோற்றுவிப்பதாகவுள்ளது. குறிப்பாக, ரெலவ்சனின் அறிவுறுத்தல்களுக்குக் கட்டுப்பட வேண்டியதில்லை என சனாதிபதி முப்படைத் தளபதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளமையானது இந்நிலையைத் தோற்றுவித்துள்ளதெனலாம்.

அதாவது, படைத்தலைமை கண்காணிப்புக்குழுத் தலைவருக்குக் கட்டுப்படாத நிலையில், அவர் பதவியில் இருப்பதில் அர்த்தம் உண்டா என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு சமாதான முயற்சிகள் தொடர்பாகக் காட்டும் கரிசனை, அக்கறை என்பனவற்றைவிட சனாதிபதி சந்திரிகாவின் ஆலோசனைக்கு ஏற்பவே செயற்படும் என்பதும் எதிர்பார்க்கத்தக்கதொன்றே.

ஆனால், சனாதிபதி சந்திரிகா தரப்பு, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தொடர்பாகத் தமக்கு கருத்து முரண்பாடு இல்லை எனவும், ரெலவ்சனோ தமக்கு வேண்டப்படாதவராகிவிட்டார் எனக் கூறமுனைவது வெறும் ஏமாற்று வித்தையாகும். சனாதிபதி சந்திரிகாவின் ஒட்டுமொத்தமான நோக்கமே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைப் பலமிழக்கச் செய்வதும், அதன் மூலம் சமாதான முயற்சிகளைப் பலமிழக்கச் செய்வதுமே ஆகும்.

சனாதிபதி சந்திரிகா விரும்புவது போன்று ரெலவ்சன் பதவி விலக்கப்படுவாரேயானால், இது ஓர் முன்மாதிரியாகவே அமைந்துவிடக் கூடும். இனிவரும் காலத்தில் சனாதிபதி சந்திரிகாவை அனுசரித்துப்போகாதவர்கள், அவரின் நிலைப்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்காத கண்காணிப்புக்குழுத் தலைவர்கள் அனைவரையுமே சனாதிபதி சந்திரிகா மாற்றக் கோரக்கூடும்.

இது ஒருபுறம் இருக்க, கண்காணிப்புக்குழுத் தலைவர் மீது ஒரு தலைப்பட்சமாக குற்றம் சுமத்துவதும் – அவர் செயற்பட முடியாதவாறு உத்தரவுகளைப் பிறப்பிப்பதும் சமாதான முயற்சிகளுக்குப் பெரிதும் நெருக்கடியைக் கொடுக்கும் நடவடிக்கைகளாகவே இருக்கும். அதாவது, சமாதான முயற்சிகளைப் பலவீனப்படுத்தும் நேரடி நடவடிக்கையாகவே இருக்கும்.

ஏனெனில், தற்பொழுது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் யுத்த நிறுத்தத்தையே அடிப்படையாகக் கொண்டதாகும். யுத்த நிறுத்தம் சரிவரப் பேணப்படாத நிலையோ அன்றி பலவீனப்பட்டுச் செல்வதோ சமாதான முயற்சிகளைப் பலவீனமடையவும், சமாதானத்தின் மீதான நம்பிக்கையைக் குறைவடையச் செய்வதாகவுமே நிச்சயம் இருக்கும்.

ஆகையினால், கண்காணிப்புக்குழு பலவீனப்பட்டுப் போகப்போக சமாதானத்தின் மீதான நம்பிக்கையும் தளர்வடைந்து கொண்டே செல்லும். இந்நிலையில், ஏற்படும் சிறியதோ அன்றிப் பெரியதோ ஆன ஒரு யுத்த நிறுத்த மீறலே சமாதான முயற்சிகள் யாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைப்பதாகிவிடும்.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து அவர் இதனையே எதிர்பார்த்திருக்கின்றார். யுத்த நிறுத்தம் பலவீனப்பட்டு மோதல்கள் வெடித்தல் வேண்டும் என்பதே அவரது குறிக்கோளாகும். அதாவது, சமாதான முயற்சிகள் முன்னேற்றம் ஏற்பட்டுச் செல்வதானது ரணில் அரசாங்கம் பலப்பட்டுச் செல்வதற்கு வாய்ப்பினை உருவாக்குவதாக அமைகின்றது. ஆகையினால், சமாதான முயற்சிகள் தோற்கடிக்கப்படுதலே ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கான வழியாக அவரால் கருதப்படுகின்றது.

இதன் காரணமாகவே, யுத்த நிறுத்த உடன்பாட்டை வலுவற்றதாக்கும் நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுள்ளார். இதன் முதற்கட்ட நடவடிக்கையாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாட்டை முடக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். சனாதிபதி தரப்பு கண்காணிப்புக் குழுவின் செயற்பாட்டில் தமக்கு கருத்து வேறுபாடு இல்லை தலைவருடனேயே எனக் கூறுவது மோசடித் தனமானது. தலைமையைத் தவிர்த்து அதன் கட்டமைப்பை ஏற்றுக்கொள்வதாகக் கூறுவது தலையில்லாமல் உடல் நன்றாக உள்ளது எனக் கூறுவது போன்றதாகும்.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகா தற்பொழுது கண்காணிப்புக் குழுத் தலைவர் தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது சமாதான முயற்சிகளுக்கு மட்டுமல்ல, சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே அரசிற்கும் விடுக்கப்பட்டுள்ள சவாலாகும். இதில் சனாதிபதி வெற்றி பெறுவாரேயானால் சமாதானத்தின் எதிர்காலம் கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# தற்போதைய சூழலை நல்லமுறையில் பயன்படுத்தி திறமையான மாணவ சமூகத்தை வளர்க்க வேண்டும்

## தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர்

(அலுவலகசெய்தியாளர்)

எம்மீதுதிணிக்கப்பட்டிருந்த கொடுமையான யுத்தத்தால் எமது மாணவ சமூகம் கடந்த இருபது வருடகாலமாக எந்த வித நற் பயனையும் பெறமுடியாது சிறைப்படுத்தப்பட்டிருந்தது. இன்று போர் ஓய்ந்திருக்கின்றது. இதனைப் பயன்படுத்தி நாம் இதுவரை காலமும் இழந்திருந்த எமது கல்வியைத் திறம்படக் கற்றுத் திறமையான ஒரு சமூகமாக எம்மை மாற்றிக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளி.வலயக்கல்விப்பணிமனையில் தமிழீழமாணவர் அமைப்பினால் நடத்தப்பட்ட உயர்தர மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியின் இறுதிநாள் நிகழ்வில் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் கலந்து சிறப்புரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மண்ணின் மீதும் மக்களின் மீதும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுவந்த யுத்தத்தால் பெருமளவு பாதிப்புக்களை எமது மாணவ சமூகமே அடைந்திருக் கிறது. சரியான பெறுமதிமிக்க கல்வியைப் பெறமுடியாது. இருட்டடிப்புச் செய்யப்பட்டிருந்தனர். இந்நிலை மாற்றியமைக்கப்பட்டு இந்த மாணவ சமுதாயம் கட்டி எழுப்பப்படவேண்டும்.

மாணவர்களுக்குப் பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற பாடசாலைக் கல்விக்கு வெளியாகச் சென்று ஏராளமானவற்றை அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான தேடல்கள் மூலம் நீங்கள் உங்களது ஆளுமையை வளம் படுத்திச் சிறந்த மாணவ சமூகமாக வாழவேண்டும். இதற்குத் துணைபுரியும் வகையில் இங்கு மேற்கொள்ளப்பட்ட இந்தத் தலைமைத்துவ கருத்தமர்வு அமைகிறது. போர் மாணவ சமூகத்தைப் பலமாகத் தாக்கியிருக் கிறது. இதன் மூலம் வெளித் தொடர்புகளை நாம் பெறமுடியாதவர் களாக மாற்றப்பட்டிருந்தோம். ஏனைய பகுதிகளுக்குச் சென்று நாம் எமது திறமைகளை சாதனைகளை நிலைநாட்ட முடியாது ஒடுக்கப்பட்டிருந்தோம். எமது திறமைகள் வெளிக் கொணரப் படாது எமக்குள்ளேயே புதையுண்டுபோனது. ஆனால் இன்று போர் ஓய்ந்திருக்கிறது. இதனைப் பயன்படுத்தி நாம் இதுவரை காலமும் இழந்திருந்த எமது கல்வியைத் திறம்படக்கற்றுத் திறமையான ஒரு சமூகமாக எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கௌரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டமாணவர்களுக்கான சான்றிதழ்களை தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (லோ)

# சி.சு.கட்சி கொள்கையில் மாற்றம் வரின் நாட்டை நிர்வகிப்பதில் பிரச்சினை உருவாகும்

## சனாதிபதிக்கு கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளில் மாற்றம் ஏற்படவேண்டும் என சிலர் அழுத்தம் தெரிவித்தாலும் அப்படி நிகழுமாயின் நாட்டை நிர்வகிப்பதில் பாரிய பிரச்சினைகள் தோன்ற இடமிருப்பதாக கம்யூனிஸ்ட் கட்சி சனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினைதொடர்பில் சிறில.சு.கட்சியின் கொள்கைகள் மாற்றப்படவேண்டும் எனச் சிலர் அழுத்தம் தருவது தெரிகிறது. அவ்வாறு நடந்து கொண்டால் நாட்டை நிர்வாகம் செய்யமுடியாத நிலை ஏற்படும் என்பதை நாம் அறிவோம்.

மேலும் அடுத்துவரும் இரண்டு வருடங்களும் தேர்தல் காலம் என்பதால் இந்த நிலை மேலும் தீவிரமடையலாம். அந்த நிலையில் புலிகள் அரசியல் ரீதியாக பலம் பெறுவர். நடுநிலை வகிக்கும் தமிழ் மக்கள் ஒருதலைப் பட்ச முடிவுக்கு வரநேரிடும், வடக்கு கிழக்கு வாழ் மூவின மக்களும் அதிக இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்கவும், தென்பகுதி மக்கள் இனவாதத்தைத் தூண்டவும், அரச இயந்திரம் அழிவு நிலைக்குள்ளாதல், பாதுகாப்புச்சேவை குழப்பத்துக்குள்ளாதல், பிரச்சினைக்கு அரசியல் தீர்வினது யுத்தத்தீர்வு என்ற நிலை தோன்றல், பிரிவினை வாதம் புத்துயிர் பெறுதல், ஏனைய தமிழ் கட்சிகள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல் போன்ற பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

யாவற்றுக்கும் காரணம் பாதாள உலகக் குழுவின் நடவடிக்கைகளே. தப்பியோடிய 50ஆயிரம் படையினரால் மக்களுக்குப் பாரிய பிரச்சினை தோன்றியிருக்கிறது. இது பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள புதிய மேலதிக பிரச்சினையாகிறது. பொருளியல், சமூகப் பிரச்சினைகளில் நாடு மூழ்கியுள்ள இந் நாட்களில் அதற்கு உரம் இடுவது போன்று உங்களின் அணுகுமுறை தெரிகிறது.

இவற்றை எல்லாம் தவிர்க்கும் வகையில் சகல அதிகாரங்களும் நாட்டின் தலைவியான உங்களிடமே இருக்கிறது.

ஆகவே இது தொடர்பாக உங்களின் துணிவான, விரைவான கவனத்தைக் கோருகின்றோம். அவசியம் ஏற்படின் இது தொடர்பில் நாங்களும் உதவி செய்யலாம் என அக்கடிதம் குறிப்பிடுகிறது.

# கண்காணிப்புக் குழுவை வெளியேற்ற வேண்டும் இல்லாவிடில் நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து

## ஜே.வி.பி. பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச

(கொழும்பு)

நோர்வே கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சனை மட்டுமல்லாமல் கண்காணிப்புக் குழுவினர் அனைவரையும் நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்றும், இல்லாவிடின் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படுமென்றும் எச்சரித்திருக்கின்றார். ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச.

ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு 7 இல் உள்ள இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஊடகவியலாளர் மாநாட்டில் பேசும் போதே விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

இலங்கையின் தேசிய பிரச்சினைத் தீர்வு அனுசரணையாளராகச் செயற்படுவதற்காக சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே நோர்வேயை வரவழைத்தார். ஆனால் இன்று அவரே அவர்களை வெளியேற வேண்டுமென்று கோருகின்றார்.

ஏனெனில் அவருக்கே தெரிந்து விட்டது புலிகளின் முகவர்களாகச் செயற்பட்டு நாட்டைப் பிரிக்க நோர்வே முயற்சிக்கின்றதென்று. நாம் சொல்கின்றோம். கண்காணிப்புக்குழுத் தலைவரை மட்டுமல்ல அனைவரையும் வெளியேற்ற சனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தோனேசியாவிலிருந்து கனரக ஆயுதங்களுடன் விடுதலைப்புலிகளின் கப்பல் வரும் போது எமது கடற்படையினர் அதனை முற்றுகையிட்டு தாக்கியழிப்பதைத் தடுத்து நிறுத்திப் புலிகளுக்குத் தகவல்களை வழங்கி தப்ப வழி செய்தவர்கள் கண்காணிப்புக் குழுவினர்.

புலிகளுக்கு ஒற்றர்களாகச் செயற்படும் கண்காணிப்புக்குழுவினரை வெளியேற்ற வேண்டும். வெறுமனவே இராஜதந்திர உறவுகள் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

எதிர்வரும் 31ஆம் திகதி புலிகளால் முன்வைக்கவுள்ள யோசனைகள் திம்புக் கோட்பாடுகளுக்கமையவே தயாரிக்கப்பட்டிருக்கும் என்பதில் எமக்கு சந்தேகமில்லை. சுயநிர்ணய உரிமை, தமிழ்தாயகம் என்பன இதில் வலியுறுத்தப்பட்டிருக்கும்.

ஆகவே நாட்டைப் பிரித்து தனித் தமிழீழத்தை உருவாக்குவதற்கான ஏணிப்படியே புலிகளின் இந்த யோசனைகளாகும்.

வெளிநாட்டுச் சக்திகள் ஒன்று சேர்ந்து ஈழத்தை உருவாக்குவதற்கான அனைத்து ஆதரவையும் புலிகளுக்கு வழங்கி வருகின்றன.

வன்னியில் அடிக்கடி நடமாடி வரும் நிதியுதவி வழங் கும் வெளிநாட்டு அமைப்புக் களின் அதிகாரிகள் புலிகளுக் குத் செய்மதி தொலைபேசி வசதிகளை வழங்குகின்றார்கள்.

அதுபோல் வட,கிழக்கை மையமாகக் கொண்டு இயங் கும் அரச சார்பற்ற நிறுவனங் களும் உதவி செய்து வருகின்றன.இந் நிலையைத் தொடர விடக்கூடாது. தடுத்து நிறுத்த வேண்டும்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் போது அரசாங்கம் வீழ்ந்துவிடும் அரசியல் சூழ்நிலை உருவாகிவருகின்றது.

இதிலிருந்து ரணில்விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை பாதுகாப்பதற்காகவே புலிகள் தமது யோசனைகளை முன்வைக்கும் நாடகத்தின் காட்சியை அரங்கேற்றியுள்ளனர். என்றார்.

# பல்லினங்கள் வாழும் வடக்கு-கிழக்கில் ஒற்றையாட்சி மூலம் தீர்வுகாண முடியாது

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

(லண்டன்)

ஒற்றையாட்சி மூலம் எவ்வாறு வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதோ அதே போன்று வடக்கு-கிழக்குப் பிராந்தியத்திலும் பல இனங்கள் வாழுகின்ற போது ஒன்றையாட்சி மூலம அந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காண முடியாது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

நேற்று அவர் பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் மேலும் கூறுகையில:

புலிகள் ஒன்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் வட-கிழக்கிலே சிறுபான்மை இனமல்ல, இரண்டாவது பெரும்பான்மை.

கசிந்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைகளை வைத்துப் பார்க்கும் போது அப்படி ஏற்றுக்கொண்டு முஸ்லிம்களுடைய அபிலாசைகளை திருப்தி செய்யும் வகையிலே முஸ்லிம்களின் சுயநிர்ணய வலியுறுத்துகின்ற வகையிலே எதையும் நாங்கள் காணவில்லை. இது புலிகளின் யோசனையாக இருக்கக்கூடாது என்று நாங்கள் நினைக்கின்றோம். இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றார்.

விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் தலைமைக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றாகத்தான் வேண்டும். ஆனால அது சமாதானப் பேச்சுவார்த்தையிலே முஸ்லிம்களும் சமபங்காளிகளாக கலந்து கொள்வதற்கு மாற்றீடாக அமையக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பு. அழைப்புக்கள் வருகின்ற பொழுது அதைக கண்ணியப்படுத்தி நாங்கள் பேசுவதற்கு விரும்பினாலும் கூட இந்த நிபந்தனையின் அடிப்படையில் மட்டும் தான் நாம் பேச விரும்புகிறோம்.

இதனைச் செய்வதற்கு அரசாங்கம் தன்னாலான எல்லா முயற்சிகளையும் செய்கிறது. ஆனால் இடையிலே இருக்கின்ற நோர்வே ஏற்பாட்டாளர்கள் விடுதலைப்புலிகளோடு கதைத்துத் தான் இந்த ஏற்பாட்டைச் செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டை எடுப்பது மட்டுமல்ல, விடுதலைப் புலிகளோடு அதைப்பற்றி கதைக்கின்ற சந்தர்ப்பத்திலெல்லாம் பேச்சுவார்த்தையின் இந்தக் கட்டத்திலே சேர்த்துக் கொள்ள முடியாது அடுத்த கட்டத்திலே சேர்த்துக் கொள்வோம் என்ற பலவிதமான காரணங்களைக் கூறி இதுவரையும் இந்த விடயம் மறுதலிக்கப்பட்டு வந்திருக்கிறது.

இந்த விடயத்தில் அரசிற்கும் தார்மீகப் பொறுப்பிலிருந்து அது விலகிச் செல்ல முடியாது அவ்வாறு அது விலகிச் சென்றால் நாங்கள் அரசோடு முரண்பட நேரிடும்.

பேச்சுவார்த்தையில் சமபங்காளிகளாக முஸ்லிம்கள் கலந்து கொள்வதற்கு புலிகள் தொடர்ந்தும் மறுத்து வந்தால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்பதை அவர்கள் உணராமல் இருக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம் என்றார் ரவூப் ஹக்கீம்.

# பாடசாலைகளுக்கிடையேயான விஞ்ஞானப் போட்டிகள்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பாடசாலைகளுக்கிடையில் வருடாவருடம் நடத்துகின்ற விஞ்ஞான போட்டிகளின் வரிசையில், இவ்வருடம் வினாவிடை எழுத்துப்போட்டி வரும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கும், கட்டுரைப்போட்டி அதேதினம் காலை 11.30 மணிக்கும் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைகள் யாவும் கிளிநொச்சி மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரிகளில் நடைபெறவுள்ளன.

விஞ்ஞானப் பேச்சுப் போட்டி 3ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பங்குபற்றும் மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதையும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத ஆர்வமுள்ள மாணவர்கள் அனைவரும் அதிபரின் உறுதிப்படுத்திய கடிதத்துடன் குறித்த நேரத்திற்கு முன்பாக பரீட்சை மண்டபங்களுக்கு சமுகமளிக்கும்படியும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

# அமைச்சர் மகிந்த விஜயசேகரவுக்குஎதிராக கற்பிட்டியில் மீனவர் போராட்டம்

கடற்றொழில் அமைச்சர் மகிந்த விஜயசேகரவின் கடும் போக்கைக் கண்டித்தும் நேற்று முன்தினம் பத்தலங்குண்டுவில் வைத்து மீனவ பரிசோதகர்களால் கைதுசெய்யப்பட்ட 9 மீனவர்களையும் விடுவிக்குமாறு கோரி சாலை மறியல் போராட்டம் ஒன்று கற்பிட்டி நகரில் நேற்று இடம்பெற்றது.

செவ்வாய்க்கிழமை லைலா வலைகொண்டு மீன் பிடிக்கச் சென்ற கற்பிட்டிப்பிரதேச மீனவர்களை பத்தலங்குண்டு தீவுப் பகுதியில் வைத்துக் கைது செய்து 24 மணித்தியாலங்களுக்கு மேல் சேரக்குறி தீவுப்பகுதியில் தடுத்து வைத்ததையடுத்து பிரதேசத்தில் பதற்றநிலை தோன்றியது.

கடற்றொழிலுக்குச் சென்ற சக மீனவர்கள் மீண்டும் கரைக்குத் திரும்பாததால் தமது தொழிலுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து நேற்று இந்த எதிர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது. தொட்டில் பகுதியில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட நூற்றுக் கணக்கான மீனவர்கள், நகர வீதியை மறித்துக் கற்பிட்டிப் பிரதேசசபைக்கு முன்பாக வீதி மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தல் ஈடுபட்டவர்கள் அமைச்சர் மகிந்த விஜயசேகரவை அப்பதவியிலிருந்து அகற்றுங்கள் எமது கடல் வளத்தைப் பயன்படுத்த எமக்குத் தடையா? வங்கக்கடலை வெளிநாடுகளுக்கு விற்றுத் தள்ளும் அமைச்சர் மகிந்த விஜயசேகர, மாத்தறைக்கு ஒரு நியதி கற்பிட்டிக்கு வேறொரு நியதியா? போன்ற பதாதைகளை ஏந்தியும் கோஷங்களையும் எழுப்பியவாறு கற்பிட்டி பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தனர்.

வீதி மறியலில் ஈடுபட்டதால் கற்பிட்டிப் பிரதேசப் போக்குவரத்துக்கள் சில மணிநேரம் ஸ்தம்பிதமடைந்திருந்தன. (32)

## கல்வி டிப்ளோமா வகுப்பு

முல்லைத்தீவு ஆசிரியர் கல்வி நிலையத்தில் பயிலும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா -பகுதி II க்கான வகுப்பு எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை உரிய இடத்தில் குறித்த நேரத்திற்கு நடைபெறும்.

குறித்த ஆசிரிய மாணவர்களைத் தவறாது இவ்வகுப்புக்கு வருகை தருமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் க.சரவணபவன் கேட்டுக் கொள்கின்றார். (26)

# கொழும்பில் களவாடப்பட்ட பணமும் நகைகளும் கிளிநொச்சி காவல் பணிமனையினரால் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

கொழும்பிலுள்ள வீடொன்றில் களவாடப்பட்ட பணமும், நகைகளும் கிளிநொச்சி காவல் பணிமனையினரால் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் தெரிய வருகையில், கடந்த 22 ஆம் திகதி அன்று குறணை கட்டுநாயக்கா கொழும்பு இல-237/5 என்னும் முகவரியைக் கொண்ட இல்லத்தில் 20 ஆயிரம் ரூபா பணமும் 69400 ரூபா பெறுமதியான நகைகளும் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து வீட்டு உரிமையாளர்களினால் கட்டுநாயக்கா சிறிலங்கா காவல் நிலையத்தில் முறையிட்ட உரிமையாளர்கள் கடந்த 24 ஆம் திகதி யன்று இது சம்பந்தமான முறைப்பாட்டினைக் கிளிநொச்சி காவல் பணிமனையிலும் மேற்கொண்டனர்.

மேற்படி முறைப்பாட்டினைத் தொடர்ந்து துரித புலனாய்வினை மேற்கொண்ட கிளி/காவல்துறையினர் கடந்த 26 ஆம் திகதி யன்று குற்றச்செயலில் சம்பந்தப்பட்ட சந்தேக நபரைக் கைது செய்ததுடன் களவாடப்பட்ட நகைகளையும், பணத்தினையும் மீட்டுள்ளனர்.

அடுத்து மேலதிக நடவடிக்கையின் பொருட்டு சந்தேக நபரையும் மீட்கப்பட்ட பணம், நகைகளையும் கிளிநொச்சி மாவட்ட முறை மன்றில் கிளி/காவல் பணிமனையினர் முற்படுத்தியுள்ளனர்.

மீட்கப்பட்டுள்ள மேற்படி பணமும் நகைகளும் முறைப்பாட்டாளரிடம் ஒப்படைப்பதற்கு கிளி/மாவட்ட முறைமன்றூடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## திருத்தம்

28-10-2003 அன்று ஈழநாதம் தினசரியின் 2 ஆம் பக்கத்தில் வெளிவந்த நாட்டுப்பற்றாளர் கந்தசாமி அவர்கள் தொடர்பான நினைவு விளம்பரத்தில் "தாய் மண் நெகிழ" என்பது "தாய் மண் மகிழ" எனத் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது தவறுக்கு வருந்துகிறோம்.

## ஒத்திவைப்பு

நிதர்சனம் நிறுவனத்தின் 15 ஆம் ஆண்டு நிறைவையொட்டி இன்று நடைபெறவிருந்த ஒளிவீச்சு காண்பியச் சஞ்சிகை 100 வது சிறப்பிதழ் வெளியீட்டுவிழா தவிர்க்க முடியாத காரணத்தால் 10-11-2003 இற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### வவு...

வெட்டுக்காயங்களுக்கு உட்பட்டு வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் ஐந்து பேரை வவுனியா மாவட்டத் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர், பிரதேசப் பொறுப்பாளர் ஆகியோர் கைது செய்து வவுனியா பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கிடாச்சூரிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் மறவன்குளம் குடியேற்ற கிராமத்தில் மினி சினிமா கொட்டகை ஒன்றினை அமைத்து இயக்கி வந்ததாகவும், அப்பகுதி பெண் ஒருவருடன் தொடர்பு வைத்து இருந்ததாகவும் அந்தப் பெண்ணின் கணவர் எச்சரித்தும் அவர் இந்த தொடர்பினை துண்டிக்காததன் காரணமாகவே இந்தக் குழு மோதல் இடம்பெற்றது என்றும், ஆரம்ப விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களாகவே இந்த பிரச்சினை இருந்து வந்தபோதும் திங்கள் இரவு பிரஸ்தாப நபரின் சினிமா கொட்டகை இனம் தெரியாத நபர்களினால் தீயிட்டதனை அடுத்தே பிரச்சினை உச்சக்கட்டத்திற்கு சென்றுள்ளது. செவ்வாய காலை குழு மோதல் உச்சக் கட்டத்தினை அடைந்ததை அடுத்து பொலிசாருக்கும், விடுதலைப்புலிகளின் வவுனியா அரசியல்துறையினருக்கும் தகவல் அனுப்பப்பட்டதனை அடுத்து இரு பகுதியும் தளத்திற்குச் சென்று பிரச்சினையினை கட்டுப்பாட்டிலுள் கொண்டு வந்தனர். (21)

### கொழும்பு...

விழா தொடர்ந்து இடம்பெற்றது. இன்றும் விழா திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

நேற்றைய தாக்குதலில் ஊடகவியலாளர்களான அத்துல பெரேரா மற்றும் ஜமுனி ரஸ்சிகா ஆகியோர் காயமடைந்தனர்.

இந்நிகழ்வில் வடக்கு கிழக்கிலிருந்து சென்ற கலாச்சாரக் குழுவினர் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என ஹிரு எனும் விழா ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. இத்தாக்குதல்களுக்கு, சில தேசிய பத்திரிகைகளும் பொறுப்பு எனவும் அவர்கள் கூறினார்.

இச்சம்பவங்கள் தொடர்பான ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

### அவுஸ்...

கூறப்பட்டுள்ளது. குறிப்பாக அரச படைகள் தமிழ் மக்களது நிலங்களை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு அதி உயர் பாதுகாப்பு வலயமென அவற்றைப் பிரகடனப்படுத்தி மக்களைக் குடியமர அனுமதி மறுத்து வருகின்றமை மற்றும் மீன்பிடித் தொழிலில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கெடுபிடிகள தொடர்பாகவும் உரையாடப்பட்டது.

இதேவேளை அண்மைக் காலமாக குடாநாட்டில் அரச படைகளுக்கும்- பொதுமக்களுக்குமிடையே மூண்ட மோதல்கள் தொடர்பாகவும், அவ் அசம்பாவிதங்களின் போது பொதுமக்கள் படையினரால் பழிவாங்கும் போக்கில் தாக்கப்பட்டமை தொடர்பாகவும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறப் பட்டது. (27)

### அதிகார...

உருவாகி, தமிழ் பேசும் மக்கள் நிம்மதிப் பெருமூச்சோடு நிரந்தரமான தீர்வு ஒன்று கிடைக்கும் எனும் கனவுகளோடு இருந்த வேளை,பேச்சுக்களில் பேசிய விடயங்களில் எதுவுமே நடைபெறாது இழுத்தடிக்கப்பட்ட அதே வேளை இலங்கையின் சனாதிபதியில் இருந்து சமாதானம் பற்றிப் போதிக்க வேண்டிய புத்த பிக்குகள் வரை, சமாதானத்தைக் குழப்ப வேண்டும் என்றும், யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும், தமிழ் பேசும் மக்களுக்கு எந்த உரிமைகளும் வழங்கக் கூடாது என்றும் இனவாதம் பேசி எந்த ஒரு அதிகாரத்தையும் தமிழ் மக்களிற்கு வழங்காது பேசிய பேச்சுக்கள் வீணான பேச்சுக்களாக மாறிய போதுதான் தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுக்களில் இருந்து இடை விலகியுள்ளனர்.

இதன் பின்னர் மக்களின் இயல்பு வாழ்வு தோன்ற வேண்டும் என்பதற்காக இடைக்கால நிர்வாக அலகு ஒன்று வடக்கு, கிழக்கிற்கு வழங்க வேண்டும் என்று அரசிடம் கோரிய போது எந்த அதிகாரமுமற்ற திட்டமே முன்வைக்கப்பட்டது. அதனை நிராகரித்துத் தமிழீழ விடுதலைப்புலிகள், புதிய திட்ட வரைவு ஒன்றினை வழங்கவுள்ளனர். இத்திட்ட வரைவினை ஆக்கபூர்வமானதாக வழங்க வேண்டும் எனவும் இப் போரினால் எழுபதினாயிரம் மக்களது உயிர்கள், பதினேழாயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்கள், பல கோடிக்கணக்கான சொத்துக்கள் என இழந்து மனித வாழ்விற்கு அப்பால்,பல துயரங்களுடன் வாழும் நாம் அதிகாரமற்ற ஆக்கபூர்வமல்லாத அரசு வழங்கும் இடைக்கால நிர்வாகத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடாது எனக் கோரி தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கோரிக்கையிடும் கையெழுத்துப் பிரதியை அனுப்பி வைப்போம்.

இக்கையெழுத்துப் பிரதியில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒப்பமிட்டுத் தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்போம். மாறிவரும் சூழ்நிலையில் மீண்டும் ஒரு போர் மேகத்தைத் தவிர்ப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

### தாக்குதல்...

டிருந்தோருடன் பேச்சுவார்த்தை நடத்தச் சென்ற கண்காணிப்புக் குழுவினரின் வாகனம் மீது கற்கள் வீசப்பட்டுள்ளன.

இதனையடுத்து அவ்விடத்திற்கு வந்த பொலிசாரும் இராணுவத்தினரும் மறியல் போராட்டத்திலீடுபட்டோரை அவ்விடத்திலிருந்து துரத்தினர். அத்துடன் கண்காணிப்புக் குழுவினரும் மறியல்போராட்டக்காரருடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இதனையடுத்து நண்பகலிற்குப் பின்னர் திருமலை-கண்டி வீதியில் போக்குவரத்து நடைபெற்றது.

இதற்கிடையே படையினர் இருவர் கல்வீச்சில் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை முள்ளிப் பொத்தானைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்று முஸ்லிம்கள் தாக்கப்பட்ட சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் அறிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நடந்துள்ள இச்சம்பவம் குறித்துச் சிறிலங்காப் பொலிசாரே நட வடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் திலக் அவர் கள் கூறியுள்ளார்.

### ஒப்பந்...

செப்ரெம்பர் 11 ஆம் திகதி இடம்பெற்ற இரட்டை கோபுரத் தாக்குதலின் பின்னர் அமெரிக்காவுக்குள் கடலின் ஊடாக கொள்கலன்கள் மூலம் குண்டுகள் எடுத்துச்செல்லப்படும் நடவடிக்கைகளை அந்த நாடு தடை செய்ய முயற்சித்துவருகிறது. (32)

### இராணுவ...

அவ்வமைப்பு தமிழ்-சிங்கள கலாச்சார நிகழ்வுகளுக்குத் தாம் எதிர்ப்பில்லை எனத் தெரிவித்த சிஹல உறுமய ஆனால் இந்த நிகழ்வு விடுதலைப்புலிகளின் பிரச்சார நிகழ்வு என்பதால் அதனை அனுமதிக்க முடியாது எனவும் கூறியது. இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் சிஹல உறுமய செய்திக் குறிப்பொன்றில் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களின் உறவினர்களே போராட்டத்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

பிந்திக் கிடைத்த செய்தி ஒன்றின்படி இன்றைய சம்பவத்தின் பின்னர் கைது செய்யப்பட்ட தமது உறுப்பினர்கள் நான்கு பேரை விடுவிக்கக் கோரி சிஹல உறுமய இன்று முற்பகல் விகார மாதேவிப் பூங்காப் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவிருக்கிறது. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது